சிவமயம்.

கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியசுவாமிகள்

அருளிச்செய்த

# திருவருட்பயன்மூலம்.

## இதன் கருத்துரையுடன்.

---

திருமயிலை,

திருவள்ளுவநாயனார் சந்நிதியில்

திருத்தொண்டுசெய்துவரும்

மேற்படியூர்

வி-சுந்தரமுதலியாருடைய

சென்னை

விக்டோரியா ஜூபிலி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

முதற்பதிப்பு.

௧௮௯௩ ௵.

# சிறப்புப்பாயிரம்.

### நேரிசையாசிரியப்பா.

திருமகள்பிறந்த விரிதிரைப்பாற்கடற்
சூறையங்கடுங்காற் சுழற்றுபுவெடுப்ப
வலைவதறவெழுந் தண்டமீப்படர்ந்து
நிலைபெறநின்ற நெடுந்திரளன்ன
வின்னறீரின்ப நன்னலஞ்சுரத்தலின்
விளங்கெழிற்றருமாக திரண்டுவீற்றிருந்த
வண்ணமும்போலு மண்ணறன்கயிலை
காவலிற்புரக்குங் கண்ணுதற்கடவு
ணந்திதாள்சுமந்தவன் தவவழித்தோன்றற்
பெண்ணையாறுடுத்த வெணணைநின்றுருத்த
தொண்டர்களிதய முண்டகமலாத்தும
விஞ்சைவாளிரவி மெய்கண்டதேவன்
மறையகத்தடக்கிய ஒருதனிக்குடிலையு
மருணூணிரைந்த பொருண்முழுதுணர்ந்து
மாடிபோலக் கூடியகாட்சியிற்
புகல்சிவஞான போதநூறொகுத்த
வகல்பொருடேர்தற் கருமையுமாங்கவன்
சம்பிரதாயத் தந்தமில்வான்பொரு
ளுலவாப்பெருங்களி யுள்ளம்படைத்த
பண்பின்மேதகைய சண்பையர்கோமான்
றற்பலன்றேராப் பற்பலசமயிகள்
மலைத்தலைக்கொண்மூ மாருதமறைந்தெனத்
தலைத்தலையிரியத் தாணினிதுரைத்த
புகழ்சிவஞான போதமுள்ளுறையாத்
திகழ்சிவஞான சித்தியின்விரிவு

உ-சா

## சிறப்புப்பாயிரம்.

மென்போன் மருண்ட புன்புலமாக்க
ளராவிடும்பையுந் திருவுளங்கொண்டுதன்
னாசக்கணாதலி னாக்கியோனாகப்
பாவிடங்கொண்டதன் னாவிடங்கொண்டு
பவப்பிரகாசப் படரிருள்விழுங்குஞ்
சிவப்பிரகாசத் திருப்பெயர்மேவித்
[illegible]மகன் மருங்கிற் பரிவுடன்வளைத்த
நாலையின்றொகைக்கு நான்மடங்குடைய
வசவனூற்சலதி னொய்தினிற்கடந்து
மரக்கலமதற்கு மாலுமியொப்ப
வெழிலிரைந்தும் வழுவறப்புணர்த்தித்
தென்னாசிர்ப்புலமை வள்ளுவன் றனக்கோர்
நற்றுணையுடைத்தெனக் கற்றவர்களிப்ப
வருட்பயனென்னா வதற்கொருநாமந்
தெருட்படப்புனைந்து செந்தமிழ்யாப்பிற்
குறளடிவெள்ளை யொருநூறியம்பினன்
மற்றவன் புலியூர் வளநகர்க்கீழ்பாற்
கொற்றவன் குடியிற் குடிகொண்டுறைந்த
பூசர்க்குறைந்த புதுமதிவேணியுங்
[illegible]கண்டமுங் கரந்த
[illegible]மாபதி சிவனென்பவனே.

சிறப்புப்பாயிர முற்றிற்று.



உ

திருச்சிற்றம்பலம்.

# திருவருட்பயன்

## மூலமும், கருத்துரையும்.

### காப்பு.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

விநாயகக்கடவுளை வந்திப்பவர்களுக்கு வேதாகம புராண கலைகள் யாவும் எளிதில் வரும்.

### முதலாவது பதிமுதுநிலை.

அஃதாவது - மேலாகிய இறைவனது இயல்பாம்.

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

(க-ரை.) அகரமாகியவுயிர் எழுத்துக்க ளெல்லா வற்றினும்பொருந்தி வேறற நிற்கும் தன்மைபோல, இறைவன் உலகுயிர்முழுதும் ஒழிவறநிரம்பி ஞான வுருவாய் அழிவின்றி நிற்பன். (க)

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்
சத்தி, பின்னமிலா னெங்கள் பிரான்.

(க-ரை.) இறைவன், தனது விமல ஆனந்த வீட்டின் எல்லையை ஆன்மாக்கள் வந்து பொருந்தும்படிச்செய்யும அருட்சத்தியுடனே பேதமின்றியொன்றிநிற்பன். (உ)

பெருமைக்கு நுண்மைக்கும பேரருட்கும
பேற்றி, னருமைக்கு மொப்பின்மையான்.

(க-ரை.) இறைவன, நிறைவினுனும் நொய்மையினுனும் கருணையினுனும் பெருதற கருமையினுனும ஒப்பிலன. (ங)

ஆக்கி யெவையு மளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப புகல்.

(க-ரை.) இறைவன், ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட வுலகங்கள் அனைததையும படைத்து நிறுததி ஆன்மாக்கள் மூலமலததுடனே அடஙகியிருக்கும்படி அழித்தலைசசெயது அவற்றிற்கு நீங்காததோர் புகலிடமாயிருப்பன. (ச)

அருவு முருவு மறிஞாக் கறிவா
முருவ முடையா னுளன்.

(க-ரை.) இறைவன், அருவடிவும் - உருவடிவும் - அறிவுடையோா உள்ளததில் தோன்றும் ஞான வடிவும் - உடையன். (ரு)

பலலா ருயிருணரும் பான்மையென மே
லொருவ, னில்லாதா னெங்க ளிறை.

(க-ரை.) இறைவன், ஆனமாக்கள் அறிவிக்க அறியும் பகுதிபோலத் தனக்கு மேலாய் நின்று உணாததுவதோர் கடவுளை இல்லாதவன். (சு)

ஆறு வறிவா யகலா னடியவர்க்கு
வாறுடா காறு தமன்.

(க-ரை.) இறைவன், தேவர்களாலும் காண்டற்கரிய மேலோனுயினும அடியாா உள்ளக் கமலத்தைவிட்டு நீஙகாத ஞானசொரூபி. (எ)

எங்கு மெவையு மெரியுறுநீர போலேகந
தங்குமவன் றுனே தனி.

(க-ரை.) இறைவன், சடசித்துக்களில் நீரிடைநின்ற தழலபோல இரண்டறக்கலந்து நிற்பினும அப்பதங்களில் தங்காது நீஙகி யேகனுய்நிற்பன.()

நலமில னண்ணார்க்கு நண்ணினாக்கு நல்
லன், சலமிலன பேரசங் கரன்.

(க-ரை.) இறைவன், தன்னை யடைந்தவருக்கு நன்மைச்செய்தலும, அடையாதவருக்கு அது செய்யாதிருத்தலும உடையனுயினும, விருப்பு வெறுப்பின்றிச் சகல ஆன்மாக்களுக்கும் சுகததைச் செய்பவனுகையால் *சங்கரன் எனனும பெயருடையன்.

உன்னுமுள தைய மிலதுணாவா யோவா
து, மன்னுபவந் தீரக்கு மருநது.

(க-ரை.) இறைவன், ஞானமயமாய்ப் பிரிப்பின்றி நின்று அனுதியே தொடர்ந்துவரும பிறவிப்பிணியை அறுத்தற்கு ஓர்மருந்தாகும் தன்மையினையுடையன், அதற்குச் சந்தேகமிலலே. (௧௦)

* சம் = சுகம. கரன் = செய்பவன்.

## ௨-வது. பசு நிலை.

அஃதாவது - பலவாகிய ஆன்மாக்களது தன்மையாம்.

பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்
துறந்தோர் துறப்போர் தொகை.

(க-ரை.) ஆன்மாக்கள், இதுகாறும் தோன்றிய காலத்தினது அளவும், இனித்தோற்றும் காலத்தினது அளவும், இதுகாறும் மோட்சத்தை யடைந்தாரது தொகையும், இனியடைதற்குரியாரது தொகையும், தம்மிலொக்கும்; எனவே அளவில்லை. (க)

திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க ளன்றி, யொருமலத்தா ராயு முளர்.

(க-ரை.) ஆன்மாக்கள், ஆணவம் - காமியம் - மாயை - என்னும் மும்மலமுடைய சகலராயும், ஆணவம் காமியம் என்னும் இருமலமுடைய பிரளயாகலராயும், ஆணவமென்னும் ஒருமலமுடைய விஞ்ஞானகலராயும் இருப்பர். (உ)

மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்க, டோன்றலர்தொத் துள்ளார் துணை.

(க-ரை.) அம்மூவித ஆன்மாக்களும் மூலமலமாகிய ஆணவத்தால் பிணிக்கப்பட்டவர்களே. அவருள் மாயையைத் துணையாகவுடைய சகலர், தாம்

கட்டுற்றவர் என்னும் தன்மை தமக்குத் தெரிதலி லர். எனவே மற்றிருவருக்குந் தெரியும. (௩)

கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக் கென்னோ செயல.

(க-ரை.) சகலாவத்தையில் தாம் கண்டறிந்த பொருள்களைச் சொற்பனவதைதயில் திரிவுபடக் காணும் அற்ப வலியினையுடைய ஆன்மாக்களுக்குச் சுதந்தரச்செயல் ஏது? (௪)

பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறிவென்ற போதன் றற.

(க-ரை.) செவி முதலிய கருவிகள் கூடாமல் ஒருவிடயதனதயும் அறியமாட்டாத வுணாவினை யுடைய ஆனமாவுக்கு நூல்வல்லோன, அறிவுடை யன், எனறிட்டபோ மிகவும நனறு. (௫)

ஒளியு மிருளு முலகு மலர்கட்
டெளிவி லெனிலென செய.

(க-ரை.) சூரியன் - சந்திரன் - அக்கினி என்னும் சுடர்களும், அந்தகாரமும், உலகமும், கண்ணினிடத்து ஒளியில்லையாயின என்ன பயனைச்செய்யும்? எனவே விளக்க விளங்கும் கண்போல, ஆன்மாக்கள் உணர்த்த உணரும் உணர்வினையுடையர். (௬)

சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணி
வை, யுய்த்தல் சதசத்தா முயிர்.

(க ரை.) சத்தாகிய இறைவனுக்கு, அசத்தாகிய சடப்பொருள்களைச்சுட்டி அறியவேண்டுவதில்லை. அசத்தாகிய தத்துவங்களுக்கு அறியும அறிவில்லை. ஆகையால் அவவிரணடு தனமையையும பகுத்தறியும் ஆன்மாக்கள், சததும அசத்தும அன்றிச சத சத்தாதல் வேண்டுமெ. (எ)

இருளி லிருளாகி யெல்லிடத்தி லெல்லாம
பொருள்க ளிலதோ புவி.

(க-ரை.) இருளில் மறைந்தும் ஒளியில் விளங்கியும் நிற்கும் பொருள்களையுடையது உலகம். எனவே கண்ணும், படிகமும், ஆகாசமும்போல ஆன்மா அதுவதுவாய் நின்று அறிவன். (அ)

ஊமன்கண்போல வொளியு மிகவிருளே
வாமன்கண் காணு தவை.

(க-ரை.) கோட்டானுடைய கண்ணுக்குச் சூரியப்பிரகாசம தோன்ருது, அதுபோல ஆன்மாக்களுக்குச் சிவஞானம் தோன்ருது. (கூ)

அன்றளவு மாற்றுமுயி ரநதோ வருடெரிவ
தென்றளவொன் றிலலா விடர்.

(க-ரை.) அனுதியாய் ஜனன மரணமாகிய துன்பத்தை அனுபவிககின்ற ஆனமாக்கள் திருவருளைக் கண்டு, தம்மிடும்பைதீர்ந்து, பேரின்பத்தையெய்துநாள் எநதநாளோ!! (கo)

## ௩ - வது. பாசநிலை, (இருண்மலநிலை.)

அஃதாவது - அறியாமையே வடிவாகிய ஆணவ மலத்தினது தன்மையாம்.

துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொ
ருளு, மின்றெனப தெவ்வாறு மில.

(க-ரை.) பிறவித்துன்பமும், வீட்டின்பமும், இவற்றைக்கூட்டி முடிக்கும் காரணங்களும், இல்லையென்று அறுதியிட்டுக்கூறுதல், காண்டல் முதலிய அளவைகளானும் இல்லை. (க)

இருளான தன்றி யிலதெவையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

(க-ரை.) இருள், எல்லாப் பதார்த்தங்களையும் மறைதது நிற்பதுபோல, ஆணவம், பிறப்பு - இறப்பு வீட்டுநெறி - முதலிய வற்றைப் பகுத்தறியாதபடி மறைத்து நிற்கும். (உ)

ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்
டு, மிருபொருளுங் காட்டா திது.

(க-ரை.) இருள், வேறொருபொருளையும் காட்டாமல் தனனையே காட்டிநிறகும. ஆணவம், ஞானத்தையும காட்டாது, தன்னையும காட்டாது, மறைந்து நிற்கும். எனவே இருளினும் ஆணவம் மிகக்கொடிது. (௩)

அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடைய
டங்கி, யின்றளவு நின்ற திருள்.

(க-ரை.) ஆணவம், அகவிளக்காகிய ஞானத்தி ஞேடே அனுதியே கலந்துகொண்டு அந்த ஞான த்தினமேற் படராது, உயிரளவிலே அமைவுற்று இதுகாறும் நீங்காது நின்றது. (ச)

பலரைபபுணார்ந்துமிருட்பாவைக்குண்டே
ன்றுங், கணவற்குந் தோன்ருத கற்பு.

(க-ரை.) ஆணவம், ஆன்மாக்களை இடையருது கலந்துநின்றும், தன்னை அவவான்மாக்களுக்குக் காட்டாத தன்மையை உடையது. (ரு)

பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெ
ரியாத, தன்மையிரு ளாரதங் தது.

(க-ரை.) ஆன்மாக்களுக்கு, அறிய வேண்டும் பொருள்களை அறியாது நிற்கும் இயல்பைக்கொடுத்தது ஆணவமே. (சு)

இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போ
க்கும,பொருளுண்டே லொன்ருகப்போம்.

(க-ரை.) ஆணவம், இல்லையாயின் பிறவித்துன் பத்துக்கு ஏது இல்லை; அஃது ஆனமாவின் சுபாவ மாயின் நீங்கமாட்டாது; நீக்கும் சிவஞானமுண்டா யின் ஆணவமும் ஆன்மாவும் ஒருசேரக் கெடும் எனவே ஆணவம் உண்டு. (எ)

ஆசா தியேலணைவ காரணமென் முத்தி
நிலை, பேசா தகவும் பிணி.

(க-ரை.) ஆணவம் இடையே வந்ததாயின், அஃது ஓர் காரணமில்லாமல் வந்து பொருந்தியது

என்னை? அஃது முத்தியினும வந்து பொருந்துமல்லவா? எனவே ஆணவம் அனாதி. (அ)

ஒன்றுமிகினு மொளிகவராதே லுள்ள
மென்று மகலா திருள்.

(க-ரை.) இருளை, விளக்கொளி கவரும்தன்மை போல, உயிர்களுக்கு மாயாகாரியஙகளைக் கவரும் தன்மையிருத்தலால், ஆணவம் நீங்கி முத்தியடைதற்கு ஏது உண்டு. (௯)

விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத் துவந்து.

(க-ரை.) சிவஞானம உண்டாய் அதனால் ஆணவம் நீங்குமளவும, மாயையினிடமாகத் தனுகரண புவனபோகங்கள் உயிகளின் புண்ணியபாவங்களுக் கிடாகத்தோன்றி, அறியாமையைச் சிறிது நீக்கி, விடய இன்பங்களைக்காட்டும. (௧௦)

## ச - வது அருளதுநிலை.

அஃதாவது - கருணை உருவாகிய ஞானத்தின் முறைமையாம்.

---

அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல்.

(க-ரை.) உலகில் ஒருவனுக்கு விரும்பிய பொருளின் மேலாய பொருள் இல்லாதவாறுபோல, அருளின்மிக்க பொருள் இல்லை. (௧)

பெருக்கநுகர்வினை பேரொளியா யெங்கு
மருககக னெனகிறகு மருள்.

(க-ரை.) உலககாரியததிற்குக் காரணமாயிருக்கி
ன்ற சூரியனைப்போல, ஆன்மாக்களின சுக துக்க
நுகர்சசிக்குக் காரணமாயிருப்பது அருள். (உ)

ஊனறியாதொன்று முயிரறியா தொன்று
மிவை, தானறியாதாரறிவார தான.

(க-ரை.) உடலுக்கு அறிவில்லை, உயிரதானே
ஒன்றை அறியமாட்டாது, ஆதலால் அருளையினறி
அறிவினைப் பெறுவார யார? (௩)

பாலாழிமீனுளுமபான்மைத்தருளுயிர்கள்
மாலாழியாளுமறித்து.

(க-ரை.) அருளின்கண்பட்ட ஆன்மாக்கள் பே
ரின்பத்தை நுகராது மாயாபோகததுள் அழுந்துந்
தன்மை, பாற்கடலினகண் வைகிய மீனகள் பாலை
நுகராது சிறிய பிராணிகளைத் தேடியுணணும் மு
றைமைத்து. (௪)

அணுகு துணையறியா வாற்ருேனி லைந்து
முணாவை யுணரா வுயிா.

(க-ரை.) இந்திரியங்கள், ஆன்மாவினுல் காரியப்
படும்போதே தாம் ஆன்மாவினுல் காரியப்படுகிருே
மென்று அறியாத தனமைபோல, ஆன்மாக்கள்,
அருளினுல் காரியப்படும்போதே தாம் அருளினுல்
காரியப்படுகிருேம் என்று அறியாத தன்மையை
யுடையன. (௫)

தரையை யறியாது தாமேதிரிவார்
புரையை யுணரா புவி.

(க-ரை.) பூமி ஆதாரமாக நடக்கும்போதே அதை மறந்து தமக்குத்தாமே ஆதாரமாகப் போக்குவரவு செய்வாரபோல, ஆன்மாக்கள், அருளினாலே தொழிற்படச்சேயே அதைத தமக்கு ஆதாரமென்று அறியாததன்மையை யுடையன. (சு)

மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்
கெடுத்தோர் ஞானம், தலைகெடுத்தோா த
[ற்கேடர்தாம்.

(க-ரை.) அருள் வியாபகத்திலிருந்தும் ஆன்மாக்கள் அருளையறியாததன்மை, மலை - நிலம் - ஆகாயம் இவற்றிலிருந்துகொண்டே இவற்றைத் தேடுபவர் தன்மையை யொக்கும். (எ)

ளாம், கள்ளத் திறைவர் கடன்.

(க-ரை.) ஆன்மாக்கள், அருளோடு கலந்திருந்தும் அதன்பயனை நுகராததனமை, வெள்ளத்தில் நின்றும தாகத்துக்குவருந்தி, சூரியவெளிச்சத்திலிருந்தும் மயங்கி, நின்றவர் தன்மையை யொக்கும்.()

பரப்பமைந்தகேண்மினிது பாற்கலன்மேற்
பூனை, கரப்பருந்த நாடுங் கடன்.

(க-ரை.) சஞ்சலமற்ற மனதுடன் அருளின் தன்மையை விசாரித்தறிதல்வேண்டும், இல்லாவி

டில் உறியின்கண் பாற்குடத்தின்மேல் இருந்த பூனை அதிலுள்ள பாலைக்குடியாது, சுவரில் ஓடுகி னற கரப்பினைப்பற்றி யுண்ணத்தாவி, பாற்குடத் தையுடைத்து பாலையும், கரப்பினையும், இழந்ததன மையை யொக்கும். (௯)

இற்றவரையிசைந்து மேதும்பழக்கமில்லா
வெற்றுயிராக்குவீடு மிகை.

(க-ரை.) அறுதியாய் அருளோடு இரண்டறக் கலந்திருந்தும் அதில் தோயாத ஆன்மாக்களுக்கு வீடு கிட்டாது. (௧௦)

---

## ரு-வது அருளுருநிலை.

அஃதாவது - ஞானவடிவாகிய குரவனது தன் மையாம்.

அறியாமை யுணர்ணின றளித்தமைத காணு
ங், குறியாகி நீங்காத கோ.

(க-ரை.) தோன்றாத்துணையாய் உள்நின்று நடத்தின அருளே, காணப்படும் குருவடிவாய் வந்தது.

அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனை
ச், சகத்தவருங் காணபாரோ தான்.

(க-ரை.) ஒருவனுக்கு அந்தரங்கமான இடத்தில்வந்த வியாதியை அவனுக்கு அந்தரங்கமான

பேர் அறிவதன்றி அயலார் அறியார். எனவே;ஆன்
மாவின ஆணவப்பிணியை அறிந்தவன் அரனே.

அருளாவகையா லருள்புரிய வந்த
பொருளா ரறிவார்புவி.

(க-ரை.) குருவடிவை உலகத்தவர் அருள்வடி
வாய் அறியார். எனவே தம்மைப்போல நினைப்
பர். (ங)

பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார்
போதமா, மெய்யிரண்டுங் காணார் மிக.

(க-ரை.) உலகவாழ்க்கையினையும், மறைந்த வு
ணர்வினையுமுடையார், அருளையும் அருளாகிய
தேசிகவடிவையும் சிறிதும் அறியமாட்டார். (ச)

பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்த
தற்காம, போர்வையெனக் காணார் புவி.

(க-ரை.) மானைக்காட்டி மான்பிடிப்பதுபோல,
மனிதரைத தன்வயப்படுத்த அருளே மானிடச்
சட்டை சாத்திவந்ததென உலகத்தவர் அறியார்,()

எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்.

(க-ரை.) எந்த நூற்பொருளும் குரவனையின்றி
உணரப்படமாட்டாது. (சு)

விடாதகுல மேவினுமெய்ப் பாவகனின் மீ
ளுங், கடனிலிருள் போவதெவன் கண்.

(க-ரை.) கிரிதானேவந்து தீண்டினும் நீங்காத விஷம், கிரிவடிவினைப் பாவிப்பானொருவனால் நீங்குமாறுபோல, அருள அனாதியே உயிரோடு கலந்திருந்தும் நீங்காதபாசம், குரவன் அருள்நோக்கால் நீங்கும். (எ)

அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வநதருளாக தான்.

(க-ரை.) விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் நிராதாரமாய் நின்றனுக்கிரகிக்கும் அருள், சகலருக்கு குரவனை ஆதாரமாய்.

ஆரறிவா ரெல்லா மகன்ற நெறி
பேரறிவான் வாராத பின்.

(க-ரை.) ஞானவடிவாகிய அருளே குருவுருக்கொண்டு வாராக்கால் வீட்டுநெறியினை அறிய வல்லவர் ஒருவருமில்லை. (கூ)

ஞான மிவனொழிய நண்ணியிடுநற்கலநற்
பானு வொழியப் படின்.

(க-ரை.) சூரியனையின்றிச் சூரியகாந்தக்கல்லில் நெருப்பு தோன்றுமாயின், அருளுருவாகிய குரவனையின்றி ஆன்மாவுக்கு ஞானமுண்டாகும். எனவே இரண்டுமில்லை. (க0)

---

## ங - வது அறியுநெறி.

அஃதாவது - உண்மைப்பொருளை யுணருமுறைமையாம்.

நீடு மிருவினைக ணோராக நேராதல்
கூடுமிறைசத்தி கொளல்.

(க-ரை.) புண்ணியபாவங்கள் இரண்டும் தம்மில் ஒப்பாகவரும் பருவத்தில் இறைவனது சத்தி பதியும். (௧)

ஏக னனேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறு தியில்.

(க-ரை.) கடவுள், ஆன்மாக்கள், ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, ஆகிய ஆறும் அறுதி. (௨)

செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ்
சேர்ப்பவனு, முய்வா னுளனென் றுணர்.

(க-ரை.) புருடன், அவனாற்செய்யப்படும் வினைகள், அவற்றின பயனாகிய இன்பதுன்பங்கள், அவற்றைக்கூட்டிப் புசிப்பிக்கும கத்தா, ஆகிய இந்நான்கும், ஆன்மா கதியடைதற்பொருட்டேயாம். ()

ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனு
டயிர், தானுணர்வோ டொன்றுந் தரம்.

(க-ரை.) உடம்பு, உயிரோடுகூடி ஒன்றுபட்டிருக்கும் தன்மையையுடையது, அதுபோல உயிர் அறிவோடுகூடி ஒன்றுபட்டிருக்கும் தன்மையை உடையது. (௪)

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்
மைதரும், பொன்னிறம்போன் மன்னிற

[மிப்பூ

(க-ரை.) படிகத்தின் பிரகாசத்தையும், பஞ்ச வன்னங்களின் நிறத்தையும், விளக்குதற்குச் சூரியப்பிரகாசம் காரணமாயிருப்பதுபோல, சித்தின் அறிவிற்கும், ஜடத்தின பிரேரகத்திற்கும், கத்தாவின் ஞானசத்தி காரணமாம். (ரு)

கணடொல்லை காணுநெறி கண்ணுயிர் நா
ப்பணொளி, யுணடிலலை யலலா தொளி.

(க-ரை.) கண்ணுள் ஒளியிருப்பதுபோல, ஆன்மாவில் ஞானவொளியுண்டு. எனவே ஞானம் முன்னிற்பின அலலது அறிதல் கூடாது. (சு)

புன்செயலி ஞேடும புலன்செயல்போ னி
ன்செயலை, மன்செயல தாக மதி.

(க-ரை.) தொழிலின்வழியே இந்திரியங்கள் செல்வதுபோல, கிரியாசத்தியின்வழியே ஆன்மாவின் செயல் நடக்கின்றது. (எ)

ஓராதே யொன்றையுமுற் றுன்றுதே நீமு
ந்திப், பாராதே பாத்ததனை பார.

(க-ரை.) ஞானம் எவவண்ண மிருக்குமோவென்று நீயாக விசாரியாதே, நினையாதே, முனசென்று பாராதே, நீ அசைவினறி நிற்க ஞானம் தானே தோன்றும். (அ)

களியே மிகுபுல னுக்கருதி ஞான
வொளியே யொளியா வொளி.

(க-ரை.) ஞானத்தினுல் வரும் மகிட்சியையே விடயமாகக்கருதி, அந்த ஞானத்தின் ஒளியிலேயே கூடிநிற்பாயாக. (கூ)

கணடபடி யேகணடு காணுமை காணுமை
கொணடபடி யேகொண டிரு.

(க-ரை.) உனக்கு ஞானம எப்படி வெளிப்பட் டதோ அப்படியே நீயும நிலைத்திருப்பாயாக. (கo)

## எ - வது உயிர்விளக்கம்.

அஃதாவது - ஆன்மசுத்தி பண்ணுவதாம்.

தூநிழலார் தற்காருஞ் சொல்லா தொகு
மிதுபோற், றுனதுவாய் நிற்குந் தரம்.

(க-ரை.) வெய்யலில வருந்தினோன நிழலையடை யுந்தன்மைபோல, உலக வெறுபபுவந்த உயிர் அருளினை அடையும். (க)

தித்திக்கும பாறுனுங் கைக்குந் திருந்திடு
நாப, பித்தத்தின றுன்றவிரந்த பின்.

(க-ரை.) பிததநோய் நீஙகியபின்னர் முன் கைத்தபாலும் திததிக்கும், அதுபோல மலவிருள்நீங்கியபினனர் முன் மறைந்து நின்ற மருளும் அருள் வடிவாகி வெளிப்படும். (உ)

காண்பா ஞெளியிருளிற் காட்டிடவுந் தா
ன்கண்ட, வீண்பாவ மெங்நாள் விழும்.

(க-ரை.) ஞானமானது தானே தன்னைக்காட் டவும், அதனை நாடாது உயிர் தானே காண்பதாகக் கண்டமையால் வரும் பயன் என்னை? (ங)

ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

(க-ரை.) ஒரு பொருளின் தன்மை, ஒளியினும்-இருளினும் - ஒருபடித்தேயாயினும், அது ஒளியில் விளங்கியும் இருளில் மழுங்கியும் நிற்றல்போல, உயிர் அருளில் தெளிந்து நிறறலும் மருளில் மருண்டு நிற்றலுமே பேதம். (ச)

கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்
லா, லெடுத்துச் சுமப்பானை யின்று.

(க-ரை.) அருள்நாட்டமுடையார்மேல் சுமத்தப்படும் சுமையானது, மற்றொருவனால் சுமக்கப்படும். எனவே அவர்களை வினைதொடராது. (ரு)

வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினையோ போயினையோ சொல்.

(க-ரை.) ஒருவன் விழித்திருக்க அவன் பொருளை மற்றொருவன் கவர்தல் கூடாதவாறுபோல, ஞானத்தைவஞ்சித்து நேயத்தை யடைதல்கூடாது.()

தனக்கு நிழலின்று மொளிகவருந் தம்ப
மெனக்கவர நில்லா திருள்.

(க-ரை.) படிகம், தன்னிறந்தோன்றுதபடி சூரியகிரணத்தினால் கவரப்படுதல்போல, ஆன்மா தற்போதம் ஜீவியாதபடி அருளினால் கவரப்படுவன்.

உற்றைகைதரும் பொற்கை யுடையவர்போ
லுண்மைப்பி, னிற்க வருளார் நிலை.

(க-ரை.) வேண்டியதொருபொருளைக்காண விளக்கைக் கையிற்பிடித்திருப்பதுபோல, நேயத்தைக் காண அருளை முனனிட்டு நிற்றல் அருளோடு கூடிநிற்கு நிலையாம். (அ)

ஐமபுலனாற் றான்கண் டகன்றா லதுவொ
ழிய, வைமபுலனார் தாமா ரதற்கு.

(க-ரை.) ஆனமா ஒருவிஷயத்தையே பஞ்சேந்திரியங்களைக்கொண்டு அறியவேண்டியதாயிருக்க, நேயத்தை அறிய ஆன்மா ஆர்? ஐம்புலன் ஆர்? எனவே, அருள்காட்ட ஆன்மா நேயத்தை அறியும். (கூ)

தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருத
லாமே யிவனா ரதற்கு.

(க-ரை.) ஒருவன் தயவினால் கொடுக்கத்தக்க பொருளை வலியினால் கொள்ளத்தக்கதாக நினைத்தல் முறைமையோ, அதுபோல அருளால் பெறத்தக்க நேயத்தை அடைதற்கு ஆன்மா ஆர்? (க0)

---

அ - வது இன்புறுநிலை.

அஃதாவது - ஆன்மலாபமடையுமுறைமையாம்.

---

இன்புறுவார் துன்புறுவா ரிருளி னெழுஞ்
சுடரின், பின்புகுவார் முன்புகுவார் பின்.

(க-ரை.) விளக்கை - முன்னிட்டுச் செல்வோர் வெளிச்சத்தையும், பின்னிட்டுச்செல்வோர் இருட்

டையும், அடைவதுபோல, அருளை - முன்னிட்டுச் செல்வோர் இன்பத்தையும, பின்னிட்டுச் செல் வோர் துன்பததையும, அடைவா. (க)

இருவ மடந்தையருக் கென்பயனின் புண்
டா, மொருவ ஞெருதநி யுறின்.

(க-ரை.) பெண்ணுக்குப் புருஷனுலன்றி இன் பமுண்டாகாதவாறுபோல, உயிர்க்கு அருள்வடிவா கிய நேயம் வெளிப்பட்டாலனறி யின்பமுண்டா காது. (உ)

இன்பதனை யெய்துவார்க் கீயு மவாக்குருப
மின்பகன மாதலினு லில.

(க-ரை.) ஆன்மாக்களுக்கு மலநீக்கத்தில் இன் பத்தினைவழங்கும் மலரகிதராகிய கடவுளுக்கு ஆந ந்தமே வடிவாகலான் அவா தன்னைததான் நுகர் வதில்லை. (௩)

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்
றின்பக், கூடலீ யேகமெனக் கொள்.

(க-ரை.) தாள் - தலை - யென்னும்சொற்கள் இர ணடும் சநதியால் தாடலை யென ஒன்றாய்நின்றாற் போல, ஆன்மா ஞானத்தினுல் நேயத்தழுந்தி யொ ன்றுபட்டிருக்கும். தாள் - தலையென்றது ஆன்மா வின் இழிவும் இறைவன் உயர்வும் காட்டவந்த வுவமை. (௪)

ஒன்றாலு மொன்று திரணடாலு மோசை
யெழா, தென்றாலு மோரிரண்டு மில,

(க-ரை.) இறைவனும ஆன்மாவும் ஒன்றென்ருல் பினனர் பொருந்தவேணடுவதில்லை, இரணடென்ருல் தம்முள்தாககிய ஒலி எழுதலைச்செய்யாது, ஆதலால் ஒனறும் அல்ல, இரண்டாவதும் இல்லை. எனவே தமமில் கலப்பிஞல் அநந்நியமாகிய அத்துவிதமாம். (௫)

உற்ருரும் பெற்ருரு மோவா துரையொழிய
யப, பற்ருரு மற்ரு பவம்.

(க-ரை.) முததியடைந்தவரும், நிஷ்டைகூடினவரும், மெய்ப்பொருளைவிட்டு நீங்காதவர். வாக்கிறக்கும்படி அதனைப்பற்றி நில்லாதவா பதமுத்திகளை அடைபவா. (௬)

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாம னில்.

(க-ரை.) பேய்பிடி யுண்டவர் செயலெல்லாம் பேயின்செயலாமாறுபோல, உன் செயலனைத்தும் இறைவன செயலாமளவும, நீயென வொன்றும் செய்யாதிருப்பாயாக. (௭)

ஒண்பொருட்க ணுற்ரு ருறுபயனே யல்
லாது, கணபடுப் போா கைப்பொருள்போ
[ற் காண்.

(க-ரை.) மெய்ப்பொருளினைப் பற்றினவர்க்கு அதனல் எய்தும் பேரின்பமன்றி, மற்றுளதொழில்கள் யாவும் உறங்குவோன்கையில் பண்டம்போல தானே நீங்கும். (௮)

மூன்றாய தன்மை யவர்தம்மின் மிகமுயங்
கித், தோன்றாத வின்பமதன் சொல்.

(க-ரை.) ஞாதுரு ஞான ஞேயங்கள் தம்மிற்கூடிய கலப்பினால் தோன்றும் பேரின்பம் சொல்ல முடியாது. (கூ)

இன்பி னினிதென்ற வின்புண்டே லின்புண்
டா, மன்பு நிலையே யது.

(க ரை.) இன்பங்களிலெல்லாம் இனிமையான இன்பம் பேரின்பம, அது அன்பை நிலையாகவுடையதாகலான், ஒருவனுக்கு அன்புண்டானபோதே அப்பேரின்பம் உணடாம. (க0)

கூ - வது

அஃதாவது - ஐவகைப்பட்ட திருவெழுத்தாகிய அருளினது முறைமையாம்.

---

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகும்.

(க-ரை.) வேதம் - ஆகமம் - புராணம் ஆகிய இவைகளெல்லாம் பஞ்சாட்சரத்தின் பொருளாகிய பதி பசு பாசங்களைச் சொல்லும் நூல்களே. (க)

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்கார மத் துள்.

(க-ரை.) கத்தா - அருள் - ஆணவம் - திரோ தம் - ஆன்மா - ஆகிய ஐந்தும் ஐந்தெழுத்தோரெழுத்தாகிய பிரணவததினுள்ளே அமைந்துநிற்கும்.

ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடந தானடுவே நாடு.

(க-ரை.) ஆணவமும், திரோதமும, ஒருபக்கலாகவும், அருளும், கததாவும் ஒருபக்கலாகவும், ஆன்மா நடுவே நிற்பன. (௩)

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும்.

(க-ரை.) ஆணவம ஆனமாவைத் திரும்பவிடாது. திரோதமும, ஆணவமும, நீங்கில் ஆனமா அருள்தாரகமாய் கத்தாவை அடைவன். (௪)

மாலாா திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசு மீளா விடின்.

(க-ரை.) பஞ்சாட்சரததை நகாரம் முனனதாக உச்சரித்தால், திரோதமும், ஆணவமும், நீங்கமாட்டா. சிகாரம முனனதாக உச்சரிக்கில் அவை நீங்கும். (௫)

ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

(க-ரை.) நகாரம் முன்னதாக வுச்சரிக்கும் விருப்பம், ஆதாரம் கத்தா என வறியாதகுற்றம். அந்தோ! (௬)

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

(க-ரை.) சிகாரம் முன்னதாக உச்சரித்தல் கூடு மாயின், பிறவித்துன்பம நீஙகுமு. (எ)

வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு.

(க-ரை.) அவவாறு உச்சரிக்கில் அருள் ஆன் மாவுக்குக் கத்தாவைக்காட்டிப் பேரின்பத்திலிருத் தும். (அ)

ஆசினவா நாப்ப ணடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு.

(க-ரை.) திரோதமும் ஆணவமும் பொருந்தா மல், ஆசாரியன் அனுக்கிரகத்தினல் ஆன்மா அரு ளுக்கும் சிவத்துக்கும் நடுவேநிற்பது முறைமை.()

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைநது.

(க-ரை.) எல்லா நூல்களும் உரைக்கும் எவவ கைப்பட்ட வுபாயங்களும், ஆன்மாக்களுக்கு, அரு ளையும் சிவத்தையும் விட்டு நீங்காது நிற்கும் திறத் தினை விளக்கும்பொருட்டேயாம். (கம)

## கம - வது அணைந்தோர்தன்மை.

அணைந்தாவது-நேயத்தழுந்திய முத்தான்மாக்களது தன்மையாம்.

ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளி
ன்பொடுங்கத், தூங்குவர்மற் றேதுண்டு
[சொல்.

(க-ரை.) நேயத்தழுந்திய முத்தான்மாக்கள் ஞா னத்தினுள்ளே தாமடங்கித் தம அறிவினுள்ளே பேரின்பம் அடங்கும்படி ஆநந்தநித்திரை செய்தி ருப்பா. (க)

ஐந்தொழிலுங் காரணங்க ளாந்தொழிலும
போகநுகா, வெந்தொழிலு மேவாமிக.

(க-ரை.) முத்தான்மாக்கள் முதல்வனது பஞ்ச கிருத்தியதத்தையும், பிரமாதிதேவரது முததொழி லேயும், சுவாக்காதிபோகத்தையும், விரும்பார். (உ)

எலலா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றலலா தறியா ரற.

(க-ரை.) முத்தான்மாக்கள் சர்வக்கியத்துவாதி குணங்கள்வந்து பொருந்திணுலும் நேயம் ஒன்றை யே கண்டிருப்பர். (ங)

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர்
போதார், தலநடக்கு மாமை தக.

(க-ரை.) ஆரவாரங்கண்டபோது தலையை உள் ளேவாங்கி அசைவறக்கிடக்கும் ஆமைபோல, முத் தான்மாக்கள் ஓர் விஷயம் எதிரிடுங்கால் அதன்

மேல் செல்லும் உணர்வினைமாற்றி நேயத்துள் அழுந்தியிருப்பர். (அ)

அவனையகன் றெங்கின்று மாங்கவனு மெங்கு, மிவனையொழிந் துணடாத வில.

(க-ரை.) உலகம இறைவனைவிட்டு நீங்காது. அதுபோல இறைவன் முத்தானமாக்களை விட்டு நீங்கான். (௬)

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சி ருக, கெள்ளுந் திறமேது மில.

(க-ரை.) உள்ளும புறமும ஒருதனமைத்தாய் நிறகும ஞானத்தினை அடைந்தோருக்கு, ஒனறை இகழ்நதிடும வண்ணம எவவாற்றானும் இல்லை. (சு)

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தட வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

(க-ரை.) உலகத்தவர் செய்தொழிலுக்குப் பிரயோசனம் உலகவாழ்ககை. முத்தான்மாக்கள் செயலினமைக்குப் பிரயோசனம நேயத்தழுந்தல். (எ)

என்ற வினையுடலோ டேகுமிடை யேறும வினை, தோன்றி லருளே சுடும்.

(க-ரை.) பிராரத்தம் தேகத்துடனேபோம், சஞ்சிதம் தீக்ஷையினால்போம், ஆகாமியம் சிவஞானத்தால் சுடப்படு

மும்மை தருவினைகண் மூளாவா மூதறிவா
ர்க், கம்மையு மிம்மையே யாம்.

(க-ரை.) முத்தான்மாக்கள் பின்படையவேண்டிய முத்தியை இப்போதே அனுபவிப்பதால், அவர்ளுக்கு மேற்குறித்த மூவிதவினையுஞ் சேரா. (௯)

கள்ளத் தலைவா துயாகருதித் தங்கருணை
வெள்ளத் தலைவா மிக.

(க-ரை.) முத்தான்மாக்கள் உயிர்கள் இந்திரியங்களின் வயத்ததாய்ப்படுந்துயரங்களை நினைத்து, கருணையினால் தளர்வெய்துவா. (௧௦)

திருவருட்பயன

மூலமும, கருததுரையும

முற்றிற்று.

விஜய௵ வைகாசி௴

மலையடிகள் நூல்நிலையம்
MARA IGAL
M -1

# அறிவிப்பு.

## திருக்குறள், திருவருட்பயன்

### மூலமும், கருத்துரையும்.

உலகத்தில் மானிடதேகத்தை எடுத்ததனுல அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கனுள், முதல் மூன்றையும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருக்குறள் வழியாய் வெளியிட்டனர்.

நான்காவது வீட்டு நெறியைக் கடவுள்குருமூர்த்தமாய் ஆன்மாக்களுக்கு விளக்குமுறைமையை கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியசுவாமிகள், மேற்படி திருக்குறளுக்கு நற்றுணையாகத் திருவருட்பயனென்னும் சித்தாந்த நூலைக் குறட்பாவினுல் செய்தருளினர். இவ்விரண்டு நூல்களையும் வாசிப்பதற்கனுகூலமாய் சிறுபாக்கெட்புத்தகமாக்கி திருவள்ளுவநாயனுர், உமாபதிசிவாசாரியர் திருவுருவப் படங்களுடன் அச்சிட்டு, ஒன்று சேர்த்து, [illegible] கோபயின்டு செய்திருப்பதால், வேண்டியவர்கள் சென்னை [illegible] தெருவில், விக்டோரியா [illegible] அச்சுக்கூடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible] ர் (க.)

[illegible] விஸ்வநாதமுதலியார்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS